# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி

**இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்காகவும்; நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையொன்றைத் தாபிப்பதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

---

*தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் அவர்களால் 2017, சனவரி மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, ஒகத்து மாதம் 15 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***156 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 16.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி

ச.வ.ஒ. 1/2016

**இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபி விருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்காகவும்; நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையொன்றைத் தாபிப்பதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளை வான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான தொரு சட்டம்**

முன்னுரை.

பதினேழு நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களும் நூற்றியறுபத்தொன்பது இணைந்துள்ள இலக்குகளும் இரண்டாயிரத்துப்பதினைந்தாம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாதலாலும்:

அத்துடன் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் வடிவமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், அமுலாக்குவதற்கும் மற்றும் பொறுப்பாகவுள்ள எல்லா முகவராண்மைகளுக்கும் வசதியளிப்பதற்கும் முன்னேற்றத்தை மேலெடுத்துச்செல்வதற்கும் கண்காணிப்பதற்கும் இலங்கை உட்கருதுகின்றதாதலாலும்:

அத்துடன் உலகளாவிய விருப்புநிலை மட்டத்தினால் வழிகாட்டப்பட்டு ஆனால் தேசிய நலனையும் சூழ்நிலைகளையும் கணக்குக்கெடுத்து மற்றும் அத்தகைய பதினேழு நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களைப் பொருளாதார, சமூக மற்றும் சூழல்சார் துறைகளில் இயைபான நிகழ்வுறு செய்முறைகளில் தேசியத் திட்டமிடற் செய்முறைகளிலும், கொள்கைகளிலும் செயல்நுணுக்கங்களிலும் கூட்டிணைப்பதற்கு இலங்கை அதன் சொந்தத் தேசிய இலக்குகளை நிலைநாட்டுமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

இச்சட்டத்தின் குறிக்கோள்கள்.

**2**. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண் டும்-

(அ) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் இச்சட்டத்தின் 11ஆம் பிரிவுக் கிணங்கத் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்குமான சட்டக் கட்டுக்கோப்பை வழங்குதலும்;

(ஆ) இயற்கையான, சமூக மற்றும் பொருளாதார வளங் களின் சூழியற்சார்ரீதியில் வினைத்திறனான பயன் பாட்டை உறுதிப்படுத்துதல்;

(இ) அரசாங்கத்தினால் எல்லா முடிபுகளும் செய்யப்படு வதில் சூழல்சார், பொருளாதார மற்றும் சமூகக் காரணி களின் ஒன்றிணைவை மேம்படுத்துதல்; அத்துடன்

(ஈ) இப்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளுக்கிணங்கச் செயல்நுணுக்கங்களை வகுத்த மைத்தல்.

## பாகம் I

### நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையைத் தாபித்தல்

நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையைத் தாபித்தல்.

**3**. (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவை எனவழைக்கப்படுவதுமான பேரவையொன்று இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, இப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப் பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் அத்துடன் அத்தகைய பெயரினால் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*பேரவையின் அமைப்பு.*

**4.** (1) பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மூன்று பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ii) தேசியத் திட்டமிடல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iii) சூழல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படுவோரும்) பின்வருமாறு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டோருமான ஏனைய எட்டு உறுப்பினர்கள்:-

(i) அவரது சுயஉந்துதலின் பேரில் அவரினால் நியமிக்கப்படும் இரு உறுப்பினர்கள்;

(ii) பிரதம அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(iii) நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்; அத்துடன்

(iv) மாகாணசபைகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒன்பது ஆட்களிலிருந்து மூன்று உறுப்பினர்கள்; இவ்வுட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுறுவதன்மேல் மாகாணசபைகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எஞ்சியுள்ள எண்ணிக்கையினரான ஆட்கள், சுழற்சி முறையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது நியமனத்துக்குக் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் தவிசாளர் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் கல்விசார் அல்லது உயர்தொழிற்சார் தகைமைகளையும் சூழலியல் அல்லது பொருளியலில் அல்லது சமூக விஞ்ஞானத்தில் பரந்த அனுபவத்தையும் கொண்டிருத்தலும், நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பாகக் குறிப்பிட்ட அனுபவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகாலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(6) சனாதிபதி, எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணங்களைக் குறித்தளித்த பின்னர் அவர் அவ்வாறு அகற்றலாம்.

(7) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அப்பொருள்பட சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(8) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் இறப்பின்மூலம், பதவிவிலகுகையின்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகையின்மூலம் அவரது பதவி வறிதாகும் பட்சத்தில், சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றி எழுத்தில் சனாதிபதிக்கு

அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய தகவலைப் பெற்றதன்மீது, (1) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

பேரவையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்.

**5.** (1) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தவிசாளர் தலைமைதாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின் நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், தமது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக, பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

**6.** பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது பேரவையின் உறுப்பினரொருவரினது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

**7**. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவா றான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் பேரவை யின் உறுப்பினர்களுக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*பேரவையின் உறுப்பினர் களுக்கான ஊதியம்.*

**8**. நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் பின்வருமாறி ருப்பின் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படு வதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும—

*பேரவையின் உறுப்பினராக விருப்பதற்கான தகைமையீனம்.*

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபை யின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகை யற்றவரென அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டிருந்தால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால்;

(ஈ) அவர், ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங் களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண் டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன் றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்;

(உ) அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண் டனைத்தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்; அல்லது

(ஊ) அவர், பேரவையின் உறுப்பினரென்றமுறையில் தமது பணிகளை அவர் நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டவராகவிருந்தால்.

**9**. (1) பேரவையின் இலச்சினை, பேரவையானது காலத்துக் குக்காலம் முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

பேரவையின் இலச்சினை.

(2) பேரவையின் இலச்சினை, பேரவை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பேரவையின் இலச்சினை, பேரவையின் வலுவளிப்புடனும் பேரவையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலும் அன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்பட லாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சி யாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) பேரவையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங் களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேரவை பேணுதல் வேண்டும்.

**10**. பேரவையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும் -

பேரவையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்.

(அ) நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேசக் கடமைப்பாடுகளை எய்துவதனை வசதிப்படுத்துதல்;

(ஆ) எல்லாத் தோதான திறத்தவர்களினதும் ஒன்பது மாகாணசபைகளினதும் கலந்தாலோசனையுடனும் ஒருப்பாட்டுடனும் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான

தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் வகுத்தமைத்தலும் அங்கீகாரத்துக்காக அமைச்சரவை முன்னர் இடுதலும்;

(இ) அமைச்சரவை அவ்வாறு முடிபுசெய்கின்றவாறும் செய்கின்றபோதும் காலத்துக்குக்காலம் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல் நுணுக்கத்தையும் பரிசீலனை செய்தலும் நாளதுவரையாக்குதலும்;

(ஈ) புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சுக்கள், மாகாணசபைகள் மற்றும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளுக்கு நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான வழிகாட்டு நெறிகளை வழங்குதல்;

(உ) அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையினதும் செயல்நுணுக்கத்தினதும் அமுலாக்குதலின் வழிமுறைகளையும் முன்னேற்றப் பரிசீலனைச் செய்முறைகளையும் வசதிப்படுத்துதலும் கண்காணித்தலும்;

(ஊ) குறிப்பிட்ட ஏதேனும் கருமத்தை ஆராய்வதற்கான நிபுணர்கள் குழுக்களை நியமித்தல்;

(எ) நிலைபெறுதகு அபிவிருத்தி நியமங்களையும் சூழியற்சார் குறிப்புக்காட்டிகளையும் அடையாளங் காணுதல்;

(ஏ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, புத்தாக்கம், கல்வி மற்றும் விழிப்புணர்ச்சி என்பன உட்பட நிலைபெறுதகு அபிவிருத்தியை மேம்படுத்துதல்;

(ஐ) நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான வழிமுறை களையும், கணக்காய்வுகளையும் மற்றெல்லாக் கருமங் களையும் அடையாளங்காணுதலும், அறிமுகப்படுத்து தலும், மேலெடுத்துச்செல்லுதலும்;

(ஒ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும்;

(ஓ) ஏதேனும் அரச வங்கியில் நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும், மூடுத லும்;

(ஔ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே யுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிட மிருந்து மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல்:

ஆயின், பேரவையானது, பேரவைக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும் கொடை களும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில், தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத் தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(க) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் அல்லது புரிதல்; அத்துடன்

(ங) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகப் பெறுதல்.

## பாகம் II

## நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும்

*நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கைக்கும் செயல் நுணுக்கத்துக்கு மான அங்கீகாரம்.*

**11.** (1) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும், நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களுடனும் இணைந்துள்ள இலக்குகளுடனும் இசைந்தொழுக விருத்தல் வேண்டும்.

(2) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் பதினைந்து ஆண்டுக் காலப்பகுதிக்கானதாகவிருத்தல் வேண்டும்.

(3) பேரவையானது, நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்; அவர் அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும், அவற்றுக்கான ஏதேனும் திருத்தமுட்பட, வர்த்தமானியில் வெளியிடச் செய்தல் வேண்டும்.

(4) அமைச்சர், அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்மேல், அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும், நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையாகவும் செயல்நுணுக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

(7) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கைக்கும் செயல்நுணுக்கத்துக்கும் இணங்கியொழுகுதல் ஒவ்வோர் அமைச்சினதும், திணைக்களத்தினதும், மாகாணசபையினதும், மாகாண அமைச்சினதும் மற்றும் திணைக்களத்தினதும் ஏதேனும் உள்ளூரதிகாரசபையினதும் கடமையாதல் வேண்டும்.

**அமைச்சுக்கள் முதலியவற்றின் நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்கம்.**

**12.** (1) ஒவ்வோர் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாண சபையும், மாகாண அமைச்சும் மற்றும் திணைக்களமும், ஒவ்வோர் உள்ளூரதிகாரசபையும், பாராளுமன்றத்தினால் 11 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத் தேதியிலிருந்து ஓராண்டுக்காலப்பகுதியினுள் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கைக்கும் செயல்நுணுக்கத்துக்கும் இணங்க, அத்தகைய அமைச்சினதும் திணைக்களத்தினதும் மாகாண சபையினதும் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களத்தினதும் உள்ளூரதிகாரசபையினதும் பரப்பெல்லைக்கு தோதான நிலை பெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்கத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாணசபையும், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களமும் ஒவ்வோர் உள்ளூரதிகாரசபையும் அமைச்சரினால் தேவைப் படுத்தப்படக்கூடியவாறான காலப்பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்கம் மீதான முன்னேற்ற அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**சூழல்சார் மற்றும் சமூகக் கணக்காய்வுகள்.**

**13.** ஒவ்வோர் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாணசபையும், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களமும், ஒவ்வோர் உள்ளூரதிகாரசபையும்-

(அ) புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள்மீது சூழல்சார் மற்றும் சமூகக் கணக்காய்வு செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மீது சூழல்சார் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**14**. அமைச்சு, திணைக்களம், மாகாணசபை, மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம் மற்றும் உள்ளூரதிகாரசபை ஒவ்வொன்றினதும் வருடாந்த அறிக்கை, நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையுடனும் செயல்நுணுக்கத்துடனும் இணங்கியொழுகியமை பற்றிய கூற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

*அமைச்சு முதலியவற்றின் வருடாந்த அறிக்கை.*

## பாகம் III

### பேரவையின் பணியாட்டொகுதி

**15**. (1) பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருக்க வேண்டியவரும், அதன் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருக்க வேண்டியவருமான ஆளொருவர் அமைச்சரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*பேரவையின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

(2) பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளிப்பதற்கும் அத்தகைய கூட்டங்களில் உரையாற்றுவதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதி உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால் அத்தகைய எவையேனும் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பேரவையானது, வினைத்திறனான தொழிற்பாட்டுக்குத் தேவைப்பட்ட குறைந்தபட்சப் பணியாட்டொகுதியினர் பற்றிய தேவைப்பாட்டை மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவையின் பொதுவான பணிப்புக்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பேரவையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நிருவாகக் கட்டுப்பாடு உட்பட, பேரவையின் எல்லா அலுவலர்களையும் நடாத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) அமைச்சரவை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியை அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம்.

*பணிப்பாளர் தலைமையதிபதி தற்காலிகமாக வருகை தராதிருத்தல்.*

**16**. பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு இயலாதவராகவிருக்கும் போதெல்லாம், அமைச்சர், பேரவையின் ஒருப்பாட்டுடன், அத்தகைய வராமையின்போது அவரினிடத்திற் செயலாற்றுவதற்குப் பேரவையின் வேறெவரேனும் சிரேட்ட அலுவலரை நியமிக்கலாம்.

*பேரவையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**17**. (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைப் பேரவை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பேரவைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பகிரங்கக் கூட்டுத்தாபனங்களில் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள அலுவலர்களைப் பேரவையின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.*

**18.** (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவின் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் சம்பந்தப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பேரவையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அவ்வுயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்

டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரி னாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அதேபோன்ற சம்மதத் துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(3) விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், பேரவை யினது பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

**நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.**

***19.*** (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்கு களினது கணக்காய்வு தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண் டும்.

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை.**

***20.*** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், பேரவையின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும் மற்றும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் கையளித்தல்.

**21.** (1) பேரவையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமை களுள் எவற்றையும் பேரவையின் தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாமென்பதுடன், தவிசாளர் அல்லது அத்தகைய உறுப்பினர், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவை யினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், பேரவையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்ற லாம்.

அமைச்சரின் பணிப்புகள்.

**22.** இச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அமைச்சர் காலத்துக்குக்காலம் பேரவைக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கி யொழுகுதல் பேரவையின் கடமையாதலும் வேண்டும்.

பேரவையின் எல்லா உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

**23.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், பேரவையின் அலுவலர்களும், சேவையாளர்களும், முகவர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக் குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பேரவையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

**24.** பேரவையானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத் தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**பேரவையின் நிதியத்திலிருந்து செலவுகள் செலுத்தப்படுதல்.**

**25.** (1) பேரவையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்திற்குமுன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் உறுப்பினரொருவரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால், பேரவையின் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**ஒழுங்கு விதிகள்.**

**26.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, குறிப்பாகப் பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்குதல்;

(ஆ) நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்க அமுலாக்கல்மீது கண்காணிப்பு வழிமுறைகளும் முன்னேற்றப் பரிசீலனைச் செய்முறைகளும்;

(இ) நிலைபெறுதகுதன்மை நியமங்களும் சூழியற்சார்ரீதியில் குறிப்புக்காட்டிகளும்;

(ஈ) கருத்திட்டங்களை எண்ணிடுவதற்கான அல்லது அளவிடுவதற்கான வழிமுறைகள்;

(உ) தோதான சமூக மற்றும் சூழல்சார் கணக்காய்வுகளை நிறைவேற்றுவதற்கான கட்டளைக்கற்கள்;

(ஊ) அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும் பின்னிப் பிணைந்த கருத்திட்டங்களினதும் வகுதிகள்; அத்துடன்

(எ) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளினால் கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான வேண்டுகோள்களைப் பரீசீலனை செய்வதற்கான வழிமுறைகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றபின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதகாலப்பகுதியினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப் பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

**27**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய:-

அமைச்சர்" என்பது, நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகள்" என்பது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், மாகாணத்திணைக்களங்கள் மற்றும் உள்ளூரதிகார சபைகள் அத்துடன் வேறெல்லா அரசாங்க மற்றும் மாகாணசபை முகவராண்மைகள் என்பவற்றை உள்ளடக்கும்;

"நிலைபெறுதகுதன்மை" என்பது, திட்டவட்டமின்றிப் பேணப் படுவதற்கு ஒரு பொருளின், நடவடிக்கையின், செயற்பாட்டின் அல்லது செய்முறையின் ஆற்றல் என்று பொருளாகும்: அத்துடன்

"நிலைபெறுதகு அபிவிருத்தி" என்பது, எதிர்காலச் சந்ததியினர் தமது சொந்தத் தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்கு அவர்களுக்குள்ள இயலுமாந்தன்மையைப் பாதிப்படைய விடாது தற்போதைய தேவைகளுக்கு முகங்கொடுக்கின்ற அபிவிருத்தி என்று பொருளாகும்.

**ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

**28**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*